1428

Regd. No. M. 878.

தொகுதி 10. பகுதி 4.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919௵ ஆகஸ்டு ௴—சித்தார்த்தி ௵ ஆவணி ௴

விஷயங்கள்.

தற்கால நிலைமை.	97
பிரஹ்மஞான தரிசனம்-பாலபாடம்.	105
சாரணர் கதை—சேஷு	110
பிரஹ்ம ஞானமும் கல்வியும்.	115
குற்றவாளிகளைச் சீர்திருத்துவதெப்படி?	121
புத்தகவிமர்சம்.	128

OFFICE OF ... 5 - MAR 19..

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது

Copy-right Reserved.

ஸ்ரீமத் வால்மீகி இராமயண வசனம்.

பண்டித நடேசசாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது "அழகும், பெருமையும், எளிமையும் ஒருங்கே வாய்ந்த நடைக்கு இவற்றிற்கு நிகரான வேறு புத்தகங்கள் தமிழ்ப்பாஷையில மிகச் சிலவேயுள்ளன." மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டுநேர்த்தியான காலிகோவில அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

(1) பாலகாண்டம், 244 P P. (2) அயோத்தியாகாண்டம 501 P P.
(3) ஆரணிய காணடம் 254 P P. (4) கிஷ்கிந்தா காண்டம் 226 P P.
(5) சுந்தரகாண்டம் 260 P P. (6) யுததகாணடம் 702 P P.

...மும் சேர்த்து வாங்கினால் ரூபா 12—8—0

...ராஜன், புக்ஸெல்லர்ஸ் அண்டு ஜெனரல்
2 கீழண்டைமாடவீதி மைலாப்பூர்,
மதராஸ்.

இந்தியாவில் மிகப்பெரிதும்

பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஷ்ம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ஹர

ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்ருய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 ஷ்காலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள

32 மாத்ரையின் விலை ரூ. 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம்

காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பி1க்குவிலை ரூ. 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை

பார்த்திராவிடில்

உடனேஉங்கள்

விலாசத்தை எழுதுங்கள்எவ்வித

செலவில்லாமலும்இனமாய்

அனுப்புகிறோம்

உ

ஸ்ரீ ராமஜெயம்.

தீபாவளி! ❋ தீபாவளி!

சகாய விலை! கரார் விலை!

தீபாவளி விளம்பரம்.

தீபாவளிக்காக வேண்டிய பலவூர் நாகரீகமான புது ஜவுளித்தினுசுகள் விலை சரசமாயும் நாணயமான ஜவுளிகளாயும் கிடைக்கக்கூடிய ஜவுளிக்கடை எது?

மதுரை அம்மன் சன்னதி தென்சரகு மகா-ள-ள-ஸ்ரீ புரோபஸர் கே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் 89-நிர் மேல்மாடி கிரஹத்தில் மூ. ரா. சுந்தரராஜய்யர் புதிதாய் அமைத்திருக்கும் ஜவுளிக்கடையில் தற்சமயம் உலகக்கொண்டாட்டத்தைக் கருதி வருகின்ற தீபாவளிப் பண்டிகைக்காக இந்தியாவில் ஜவுளித்தினுசுகள் உற்பத்தியாகின்ற ஒவ்வொரு ஊர்களிலும் தகுந்த ஏஜண்டுகளை ஏற்படுத்தி நெசவுகாரர்களுக்கு முன் பணம் கொடுத்து தற்கால நாகரீகத்திற்கேற்றபடி ஜவுளிகள் நயமானதாயும் விலை சரசமாயும் ஏஜண்டுகளின் நேர்பார்வையில் ஏராளமான ஜவுளித்தினுசுகள் தயார் செய்து வரவழைத்து நம் இந்து தேச நேயர்களின் மனம் திருப்தியாகும்படி ஒவ்வொருவருக்கும் ஜவுளித்தினுசுகள் கொடுத்து விசேஷ வியாபாரம் செய்து வருகின்றபடியால்

சுதேச அபிமானமுள்ளவர்களாகிய தாங்கள் ஷை ஜவுளிக்கடைக்கு வந்து தங்களுக்கு வேண்டிய மாதிரி ஜவுளிகளை வாங்கிக்கொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் ஆர்டர் செய்தால் வீ. பி. மூலம் அனுப்பக்கூடும். கியாட்லாக் வேண்டுவோர்களுக்கும அனுப்பக்கூடும்.

மூ. ரா. சுந்தரராஜ அய்யர்,

பலவூர் நாகரீகமான ஜவுளி வியாபாரம்,

அம்மன சன்னதி, தென்சரகு,

மதுரை.

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

நன்றாகப் பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0-12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.
தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம்.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

உ

தனலெக்ஷிமி சுதேசி ஜவுளிமளிகை.

தீபாவளி! * தீபாவளி!

நயம் திணுசுகள் ௭

சுதேச ஜவுளிப்பிரியர்காள்! இப்பவும் எமது சுதேசி ஜவுளி மளிகையில் நிகழும் தீபாவளி பண்டிகைக்காக ஏராளமான நயம் ஜவுளி திணுசுகள் நமது நேயர்களுக்குப் பிடித்தமான ரகங்களில் தயாரித்து விற்பனைக்குத் தயாராயிருக்கிற படியால் நண்பர்கள் யாவரும் எமது ஜவுளிகளை நிரம்பவும் சகாயமான விலைக்கு வாங்கித் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடும்படியாகக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

முக்கிய கவனிப்பு:— வெளியூர் ஆர்டர்கள் உடனே கவனிக்கப்படும். ஆப்பிரிக்காவிற்கு ஏஜண்டுகள் தேவை.

இனம்! எமது கேட்லாக் இனம்!

தந்திவிலாசம்
முராஹரி
மதுரை.

மு. ரா. கஸ்தூரி அய்யர்,
அம்மன் சந்நிதித்தெரு, மதுரை,
(தென் இந்தியா)

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

மு. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுரவாசல்தெரு, மதுரை

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ள-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக்கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை, சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை, தினுசுகளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

☞ N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக்கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10 } சித்தார்த்தி௵ ஆவணிமீ 1919௵ ஆகஸ்டுமீ { பகுதி 4

தற்கால நிலைமை.

அமெரிக்காவில் முற்றிலும் மது விலக்கப்பட்டது என்பது நேயர்கள் அறிந்த விஷயம். அமெரிக்காவின் சுபாவம் யாதெனில், எதையும் அரை குறையாய் விடுவதில்லை. செய்வன திருந்தச்செய் என்ற கொள்கையை அமெரிக்கர் கொண்டவர் போலும். சென்ற யுத்தத்தில் அமெரிக்கரின் தேர்ச்சியைக் கண்டோம். அவர்கள் மிகுந்த உற்சாக சீலர்கள். பணத்திற்குத் தட்டில்லை. ஆகையால் அவர்கள் கொண்ட கருமத்தை முடித்துத் தீர்க்கின்றனர். இங்கிலாந்தில் மதுபானம் செய்யும் வழக்கத்தை நிறுத்துவதற்காக அமெரிக்காவில் அம்முயற்சியில் கைதேர்ந்தவரான ஸ்ரீமான் உவில்லியம் ஜான்ஸன் என்ற ஒரு பெரிய நிபுணரை அமெரிக்காவிலுள்ள மதுவிலக்குச் சபையார் இங்கிலாந்திற்கு அனுப்பியுள்ளார். அவர் அங்குச் சென்று தன்னுடைய வேலையைத் தொடங்கி விட்டாராம். ஸ்ரீமான் ஜான்ஸனுக்கு பூனைக்காலர் என்று பெயராம். ஏனெனில் எப்படிப் பூனையானது சந்தடி செய்யாமல் யாவருக்கும் தெரியாமல் ஒரு இடத்திற்குச் சென்று, அங்கே பாலைக்

குடித்து விடுமோ, அதன் காரியத்தைப் பார்த்தபிறகு தான் பூனை வந்திருந்தது என்ற விஷயத்தை அறிவார்களோ, அம்மாதிரியே இவர்வேலையைச் சந்தடி செய்யாமல் சாதிப் பதில் கெட்டிக்காரராம். அமெரிக்கா சபையார் ஸ்ரீமான் ஜான்ஸனை யுக்தப்படி முயற்சி செய்யவும், பணம்செலவு செய்யவும், தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும், நடத்தவும் அதிகாரம் கொடுத்திருக்கின்றனர்.

***

அமெரிக்காவில் காரியத்தைச் சாதிப்பதற்கு எந்த எந்த வழிகளைக் கையாளுகிறார்களோ, அவைகளை ஸ்ரீமான் ஜான்ஸன் இங்கிலாந்திலும் கையாளுகிறார். குடியால் வரும் கெடுதிகளையும், அதனை நீக்குவதால் வரும் இலாபங்களையும் சமத்காரமாய் விளக்கிக் கூறுகிறார். பெரிய எழுத்துக்களில் அச்சிட்டு குடியினால் நேரிடும் கேடுகளை சுவற்றில் ஒட்டும் கடுதாசிகளால் வெளிப்படுத்துகிறார். மேற்கூறிய சுவரொட்டி விளம்பரங்களில் கண்ணைக்கவரத் தக்கதும் கவனத்தை இழுக்கத்தக்கதுமான வாக்கியங்கள் காணப்படுகின்றன. அவைகளில் சில பின் வருவன.

"குடிக்கும் நாய்க்குப் பிறக்கும் நாய்க்குட்டிகள் பலமற்றவைகளாயும், ஊனமாயும் பிறக்கும்."

"குடிக்கும் குழந்தைகள், குடிக்காத குழந்தைகளைப் போல பாடங் கற்கமுடியாது."

"ஒவ்வொரு வருஷமும் 9, 228 வீடுகளில், குடிவெறி கொண்ட காமுகர்களால் நாசம் உண்டாகின்றது."

"டைடானிக் என்ற பெருங்கப்பல் முழுகியபோது 1503 ஜனங்கள் சமுத்திரத்தில் மூழ்கினார்கள் ஆனால் குடியினால் ஒவ்வொரு வாரத்திலும் 1,503 ஜனங்கள் இறந்து போகிறார்கள்.

"குடியினால் 8 நிமிஷத்திற்கு ஒருமனிதன் வீழுக்காடு சாவு நேரிடுகிறது."

இது போன்ற விளம்பரங்களினால் மனிதர்களின் கவனமானது இழுக்கப்படுமென்பதில் சந்தேகம் இல்லை.

அமெரிக்காவில் உள்ளதும் ஸ்ரீமான் ஜான்ஸனை அனுப்பியிருக்கிறதுமான மதுவிலக்குச் சபைக்கு வருஷ வரும்படி 300,000 பவுனும். அதைத்தவிர ஏராளமான முதலுமிருக்கிறதாம். 5,லக்ஷம் சந்தாதார்களிருக்கிறார்களாம். எப்போதாவது பணம் உதவுகிறவர்களின் சங்கை 5 லக்ஷமாம். பணத்திற்கு லக்ஷாதிபதிகள் தான் உதவி செய்கிறார்கள் என்பதில்லையாம். நாடகசாலை, படக்காட்சி சாலை, எலக்ஷன் கூட்டங்கள், சபைகள், சங்கங்கள், பார்லிமெண்டு அங்கத்தினர், மந்திரிகள், கிறிஸ்தவப்பாதிரிமார் எல்லார் மூலமும், எல்லாவிதங்களிலும் இச்சபையார் மூயன்று இங்கிலாந்தையும் அமெரிக்காவைப்போல் குடியற்ற நாடாகச் செய்யப்போகிறாராம். இவர் ஜெயம் பெறுக! இவர் மூலம் இந்தியாவுக்கும் அனுகூலம் சித்திக்குமாக!

***

ஸ்ரீமான் ஸி. எப். ஆண்ட்ரூஸைப் பற்றி யறியாத நேயர்களிருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறோம். இந்தியாவுக்குக் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக வந்த பாதிரியிவர். ஆனால் இங்குவந்த பிறகு, சில காரணங்களால் பாதிரி வேலையை ராஜினமாச் செய்து விட்டு இந்தியாவுக்கு உழைப்பதையே தன் கடமையாகக் கொண்டு உழைத்து வருகின்றனர். மகாத்மா காந்தியடிகளிடத்துமிகுந்த பக்தியும், அன்பும், மிகுந்தவர். கவீந்திரரான ரவீந்திரநாத டாகூர் அவர்களது சாந்திநிகேதனத்தில் அமர்ந்திருக்கும் உபாத்தியாயர்களில் ஒருவராயிருக்கின்றனர். பிஜி தீவுகளில் குடியேறியிருக்கும் இந்தியக் கூலிகளின் ஸ்திதியைப்பற்றி விசாரிப்பதற்காக அங்குச் சென்று விசாரணை செய்து அறிக்கையை வெளியிட்டார். அம்மாதிரியே தென் ஆப்பிரிக்காவிலிருக்கும் இந்தியர்களது சேஷமவிஷயமாயும் உழைத்திருக்கிறார். சிலகாலத்திற்கு முன் சென்னையில் உள்ள செலவு சாலைகளின் ஆங்கில முத

லாளிகளுக்கும், கூலி இந்தியர்களுக்கும், வேற்றுமை ஏற்பட்டிருந்த சமயத்தில் இருபேர்களுக்கும் சமாதானம் நிகழும்படி முயன்றவர்களில் இவர் முக்கியஸ்தர். ஆகவே இந்தியர்கள் சம்மந்தமாய் விசேஷமாய், இந்தியக் கூலியாட்கள் விஷயமாய், அதிகமான அறிவும் அனுதாபமும் உள்ளவர் என்பதில் யாதொரு ஐயப்பாடுமே இல்லை.

***

ஸிலோன் அல்லது சிங்களத்தீவில் உள்ள தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள், லாபகரமாய் நடப்பதற்கு இந்தியாவிலிருந்து அங்குச் செல்லும் கூலிகள் தான் காரணம் என்பதும், இந்தியாவிலிருந்து கூலி ஆட்கள் செல்லாவிட்டால் அத்தோட்டங்கள் பாழ்தான் என்பதும் வெளிப்படை. இங்கிருந்து அங்குச் செல்லும் இந்தியக் கூலிகளுக்குப் போதுமான வஸதிகளும், இல்லையென்பதும், கூலிகளைக் கூட்டிச்செல்லும் கங்காணிகள் அவர்களைப் பலவிதமாய் ஏமாற்றி, கடன்களைக் கொடுத்து, ஜனங்களைக் கூட்டிப்போகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்த விஷயம். கூலிகளை வேலை செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்துவதற்காக அத்தீவில் சட்டங்கள் தோட்டக்கார முதலாளிகளின் சார்பாகவே ஏற்பட்டு இருக்கின்றன வென்றும், பற்பல அற்பத் தவறுதல்களுக்கும், காவல், சவுக்கடி முதலிய அனுசரீகமான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன வென்பதும், யாவரும் அறிவார்கள்.

***

ஸர் பொன்னம்பலம் அருணசலம் என்ற ஸ்ரீமான் இந்தியக்கூலிகளின் பேரில் அனுதாபம் கொண்டு அத்தீவின் சட்டசபையிலும், அதற்கு வெளியே பத்திரிகை மூலமாயும், தாம் ஏற்படுத்தியுள்ள சபைமூலமாயும் இந்தியர்களுடைய ஸ்திதியைக் கொஞ்சம் சிலாக்கியமாக ஆக்கவேண்டுமென்று முயன்று வருகிறார். இந்தியர்கள் படும் துன்பங்களாலும் ஸிலோனுக்குக் கூலியாட்களை அனுப்புவது தவறு என்ற குழப்பமும் சென்னை ராஜதானியில் இருக்கின்றது.

இந்தியக் கூலிகளின் ஸ்திதியை உள்ளபடி விசாரித்தறியும் வண்ணம், ஸ்ரீமான் ஸி. எப் ஆண்ட்ரூஸ் அங்குச் சென்று இந்தியக் கூலிகள், கங்காணிகள், முதலாளிகள், அவர்களுடைய உத்யோகஸ்தர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முதலிய அனைவோர்களையும் விசாரித்திருக்கிறார். ஸிலோன் ராஜாங்கத்தார் புதிதாய் சட்டம் நிரூபணம் செய்யப்போகிறார்கள். அச்சட்டமானது இந்தியர்கள் ஆமோதிக்கத்தகுந்ததா அல்லது ஆக்ஷேபிக்கத்தகுந்ததா என்று இந்தியர் நிச்சயம் செய்யவேண்டியதவசியமாகிறது. அங்ஙனம் செய்வதற்கு ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் அவர்களின் அபிப்பிராயமானது நமக்கு மிகவும் உபயோகமாயிருக்கத்தக்கது.

***

மேற்கூறிய சட்ட மசோதாவானது பற்பல விஷயங்களில் இந்தியர்களுக்குத் திருப்திகரமானதாக இருக்கிறதாம். அதில் சிற்சில மாறுபாடுகள் செய்தால் இன்னும் அதிக திருப்திகரமாயிருக்கும், என்றும் ஆகையால் சென்னை ராஜதானியிலிருக்கும் இந்தியர்கள் மேற்கண்ட மசோதாவை ஆமோதித்து ஆதரிக்கவேண்டும் என்றும், அத்துடன் அதில்காணப்படும் குறைகளை நீக்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டுமென்றும் ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் கூறுகிறார். நாம் ஏனோதானோவென்று இருந்து விட்டு, மேற்படி சட்டமானது நிரூபணம் செய்த பிறகு வருந்துவது மதியீனம் என்றும், மேற்கண்ட மசோதாவுக்கே பற்பல இடையூறுகள் வந்து அது தள்ளுபடியான பிறகு வருந்துவதும மதியீனம் என்றும் கூறுகிறார். தற்காலத்தில் இந்தியக் கூலியின் ஸ்திதி யென்னவென்றால், கங்காணியிடம் கடனாக "அட்வான்ஸ்" வாங்கிக்கொண்டு கூலியாள்வருகிறான். ஆகையால் கூலி கங்காணிக்கு அடிமை போலாகிறான். கடனைச் செலுத்தாமல் கூலியாள் வேலையை விட்டு நீங்க முடியாது. வேண்டுமானால் வேறு ஒரு தோட்டத்தில் வேலை

செய்யும் கங்காணியிடம் கடன் வாங்கி முந்திய கடனைச் செலுத்திவிட்டு அங்கே மாறலாம். ஆனால் அதனால் விசேஷம் இல்லை. என்ன பாடுபட்டும் கடன் தீருகிறதில்லை. ஆகையால் வேலையில் அசிரத்தை ஏற்படுகிறது. அந்த வறுதலுக்காக கூலி பேரில் பிராது சாட்டுகிறார்கள் அவன் தண்டிக்கப்படுகிறான். வயிற்றுக்குப் போதுமான ஆகாரம் இல்லை. வந்த கூலி யெல்லாம் கடனுக்குப் போதாது. ஆகையால் மன வருத்தத்தைப் போக்கக் குடிக்கிறான். ஆகையால் கூலியாட்களின் கதி அதோகதி தான். எல்லாவற்றிற்கும் காரணம் கடனே. ஆகையால் புதிய மசோதாவில் கூலிகள் தோட்ட சுவான்தார்களுக்கும் கங்காணிகளுக்கும் கொடுக்கவேண்டிய கடன்களை சட்டமூலம் தள்ளுபடி செய்யவேண்டியது என்றும், கங்காணிகளுக்கு வரவேண்டிய எல்லாக் கடன்களையும் தோட்டக்காரர்கள் அவர்களுக்கு 5 பாகமாக ஐந்து வருஷங்களில் செலுத்த வேண்டியது என்றும் விதிக்கப்படுகிறது. இந்தியர்களுக்கு இது மிகவும் சிலாக்கியமான விதி, கூலியாட்கள் திருப்தியாய் வேலை செய்தால் வேலை நன்றாய் நடக்குமாகையால் தோட்டக்காரர்களுக்கும் உண்மையில் இலாபகரமானது. இனி அவர்கள் கங்காணிகளுடைய தயவை அபேக்ஷிக்கவேண்டியது அவசியமில்லை. ஆனால் சில சிறிய தோட்டக்காரர்கள் தங்களால் 5 வருஷத்துக்குள் கடன் முழுமையையும் தீர்க்க முடியாதென்றும், அப்படிச் செய்யவேண்டுமானால், சுகாதாரத்திற்காகவும் கூலியாட்களின் வஸதிக்காகவும் தோட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்யமுடியாதென்றும் ஆக்ஷேபிக்கிறார்கள். ஆகையால் ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் சொல்லுகிறதென்னவென்றால், ராஜாங்கத்தார் 5 வருஷத்தில் கங்காணிகளுக்கு கடன்களைச் செலுத்திவிடவேண்டும் என்றும் தோட்டக்காரர்கள் அரசாங்கத்தாருக்கு 10 வருஷ வாயிதாவில் மேற்கண்ட கடன் செலுத்திவிடவேண்டும் என்றும் ஒரு திருத்தம் செய்தால் இந்த ஆக்ஷேபணைக்கிடமிருக்காது என்கிறார். குடிகளுக்கு சௌகரியார்த்தமாக

அரசாட்சியார் இந்த சௌகரியம் செய்வது சுலபமாகும். இதனால் உண்மையான லாபம் உண்டு. ஆகையால் இதனைச் செய்ய ஸிலோன் அரசாங்கத்தார் இணங்குவார்கள் என்று நம்புகிறோம்.

***

மேற்கூறிய மசோதாவில் இந்தியாவிலிருந்து கூலிகளைத் தருவிப்பதற்குச் செய்திருக்கும் ஏற்பாடுகளும் அவர்களுடைய சுகாதார வஸதிகளுக்காகச் செய்திருக்கும் விதிகளும் திருப்திகரமாயிருக்கின்றனவென்று கூறுகிறார். கூலியாட்களுடைய வரத்துப் போக்கையும், தோட்டங்களுக்கு அவர்களை அனுப்புவதையும், ஸர்க்கார் அதிகாரியான கூலி "கண்டிரோல்லர்" என்றவரிடம் ஒப்புவித்திருக்கிறார்கள். இதுநல்ல ஏற்பாடுதான். என்றாலும் அவ்வேலைக்கும், அவரிடம்கீழ் அதிகாரிகளான வேலைகளுக்கும் நியமிக்கப்படுபவர்கள்நல்ல மேலான படிப்பாளிகளாயும், சரியான அந்தஸ்துள்ளவர்களாயும், நல்ல சம்பளம் கொடுக்கப்பட்டவராயும் இருக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

***

ஆனால் இப்புதுச் சட்ட மசோதாவிலும் கூலியாட்கள் வேலைக்குப் போகாத போனாலும், அஜாக்கிரதையாயிருந்தாலும், அக்கிரமமாய் நடந்தாலும் ராஜாங்க அதிகாரிகளிடம் பிராது சாட்டி அவர்களைத் தண்டிக்கலாம் என்ற அநாகரீகமான விதிகள் காணப்படுகின்றனவென்று ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் விசனப்படுகிறார். இது அநாகரீகமானது. நிர்ப்பந்தத்திற்காகச் செய்யப்படும் வேலை தோட்டக்காரனுக்கும் பயனில்லை கூலியாட்களுக்கும் கௌரவமில்லை. உண்மையாய்ப் பார்க்கின், இந்த விதிகளை விலக்கினால் யாவருக்கும் க்ஷேமம்.

***

ஸிலோனில் மற்றொரு குறை என்னவென்றால் கூலி மிகவும் சொற்பமாகயிருக்கின்றது. விசேஷமாய் தேயிலைத் தோட்டங்களில் தான் மிகவும் குறைச்சல். ஆனால் கூலியையை எப்படி திட்டம் செய்வது? சர்க்காரில் சரியான கூலியாதென்று விதிப்பதா அல்லது வேறு எப்படி? பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்தின் நிர்ப்பந்தத்தால் கூலியை உயர்த்துவது தான் சிலாக்கியம் என்று ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் கூறுகிறார்.

மனமுவந்து செய்யுங்காரியம் நன்றாயும் சிலாக்கியமாயும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிற்சில தோட்டங்களில் குடிகளுக்கு இருப்பிடமும், சுகாதாரவஸதிகளும் இருக்கின்றன. கூலியும் மற்றதோட்டங்களைவிட அதிகமாய் இருக்கின்றன. ஆகையால் அங்கே வேலைசெய்யும் கூலியாட்கள் ஸ்திரமாயிருக்கிறதுடன் தங்கள் குழந்தைகளையும் அங்கேயே வேலைக்கு வைக்கவேண்டுமென்று ஆவல் கொள்கிறார்கள். ஆகையால் பொது ஜனங்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை பலமாய் வெளிப்படுத்தினால் கூலியும் சரியானபடி உயர்த்தப்படும் என்று நினைக்கிறார்.

***

ஸிலோனில் குடிவிஷயமாய் சீர்திருத்தம் செய்யவேண்டியிருக்கிறது. குடியினால் கூலியாட்களுக்கும் தோட்டக்காரர்களுக்கும் கேடேயொழிய வேறில்லை. ஆனால் அரசாங்கத்தாரே, குடிவிஷயமாய்ச் சிலமாறுபாடுகள் செய்யப்போவதாய்ச் சொல்லுகிறார்கள். அவை மது விலக்குக்கு ஏற்றவையாயிருக்குமாக!

***

சென்னை ராஜதானியிலுள்ளவர்கள் ஸிலோனுக்குப் போகும் சகோதரர்கள் விஷயமாய் அசிரத்தையாயிராமல் கவனமாயிருந்தால் மேற்கண்ட சீர்திருத்தங்களுடன் மேற்கூறிய சட்டமசோதாவை நிரூபணம் செய்யவேண்டும் என்று ஆங்காங்கு கூட்டங்கள் கூடி தீர்மானங்களைப் பிரசுரம் செய்யவேண்டும் என்று ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் கூறுகிறார். அதுசட்டமான பின்னரும், சென்னை அரசாட்சியாரும் ஜாகரூகர்களாய் இருந்து தம்முடைய பிரஜைகளான இந்தியர்கள் அடுத்த அரசாங்கமாகிய ஸிலோன அரசாட்சியாரால் சரியாய் நடத்தப்படுகிறார்களா என்று கவனமாய்ப்பார்த்து வரவேண்மென்று வற்புறுத்துகிறார்.

ஆர். அரங்கஸ்வாமி ஐயர்.

குறிப்பு—சென்ற சஞ்சிகையில் முதல் 8 பக்கங்களுக்கும் 65 முதல் 72 வரை எண்களுக்கு பதிலாக தவறுதலாக 97 முதல் 104 வரை எண்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன அவ்வாறு தயவு செய்து திருத்திக்கொள்ள வேண்டும்—பத்திராதிபர்.

பிரஹ்மஞான தரிசனம் (பாலபாடம்)

அத்தியாயம் 45.

வினையும் அதனைச் செய்யும் நோக்கமும்.

அநேக நல்ல யோக்கியர்கள கூட "நன்மையை விளைப்பதற்காகத் தீமை செய்யலாமா" என்ற ஆசங்கை கொண்டு ஒரு முடிவுக்கு வராமல் திகைக்கிறார்கள். கர்மத்தைப்பற்றிய தத்துவங்களை ஆராய்ச்சி செய்து இந்தக் கேள்விக்கு யாது விடை கிடைக்கிறதென்று பார்ப்போம்.

ஒவ்வொரு வினையும் அதற்கு உரித்தான உலகத்தில் பலனைக் கொடுக்கும். ஸ்தூல உலகில் செய்யும் வினைகள் அவ்வுலக சம்பந்தமான பலனைத் தருகின்றன. அதாவது ஒரு மனிதனுடைய ஸ்திதிமதி தேக ஆரோக்கியம், ரோகம் வஸதி முதலியவற்றில் வேறுபாடுகளையுண்டுபண்ணுகின்றன.

நாம் ஆசைப்படும்போது என்ன நிகழ்கின்றது? புவர்லோகத்திரவியத்தில் சலன மேற்படுகின்றது. புவர்லோகத்தில் செய்யும் கர்மங்கள அதாவது நாம் படும் ஆசைகள் முதலியன அவ்வுலகத் திரவியத்தில் மாறுபாடுகளைச் செய்கின்றன. நம்முடைய மனோ விகாரங்கள, உணர்ச்சிகள் ஆசைகள் இவைகளை மாற்றியமைக்கின்றன. அதாவது நாம் படும் ஆனந்தம் அல்லது துக்கம், மனச்சஞ்சலம் அல்லது அமைதி, இன்பம் அல்லது துன்பம் இவைகள் நம்முடைய புவர்லோக வினைகளின் பயன். இப்பயன்களைப் பெறுவதில் ஒருவன் ஏழையாயிருந்தாலும், பணக்காரனாயிருந்தாலும், மேற்குலத்தாராயிருந்தாலும், கீழ்மக்களாயிருந்தாலும் வித்தியாஸமில்லை.

புவர்லோகத்தில் இச்சைகள் செய்கைகளாயிருப்பது போல் எண்ணங்கள் மானசலோகத்தில் செய்கைகளாயிருக்கின்றன. எண்ணங்கள் நமக்கிஷ்டமான ரூபங்களை உண்டாக்கி அவைகளை அடைவதற்காக நம்மை வேலை செய்யும்

படி தூண்டுகின்றன. அல்லது நமக்கு அருவருப்பான பொருள்களின் உருவங்களை உண்டாக்கி அவைகள் நம்மை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு வேண்டிய வேலைகளைச் செய்யும்படி ஏவுகின்றன. இவ்விதமாய் எண்ணங்கள் நம்முடைய இச்சா சக்தியைத் தாக்கி நம் நடத்தையை வேறுபடுத்தி கர்மத்தைச் செய்வதற்குக் காரணங்களை உண்டுபண்ணுவதும் தவிர நம்முடைய நடத்தைகளை ஸ்திரப்படுத்திக் குற்றங்களை மாற்றுகின்றன.

ஒரே வேலையில் சேர்ந்து நாள் முழுவதும் வேலை செய்துகொண்டும் ஒரே விதச் சம்பளம் பெற்றுக்கொண்டும் ஒரே வீட்டில் குடியிருக்கிற இரண்டு மனிதர்கள், ஒருவருக்கொருவர் வேறுபாடான நடத்தையுள்ளவர்களாயிருந்தால், வெவ்வேறு சுற்றங்களை உடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் வசிக்கும் அறைகளைப்போய்ப் பார். இந்த வித்தியாசம் உனக்கு பிரத்தியக்ஷமாய் புலப்படும் அவர்களுக்கு ஒரேவிதமான சிநேகிதர்கள் இருக்கமாட்டார்கள். அவர்கள் அனுபவிக்கும் சுகங்களும் வித்தியாசப்படும். அவர்களுடைய மனதுகளிலுள்ள வித்தியாசமானது அவர்கள் நடத்தைகளையும் வேறுபடுத்தி யோக க்ஷேமங்களையும் மாற்றும். ஒரேவிஷயத்தைப் பார்ப்பதிலும் கேட்பதிலும் வாசிப்பதிலும் இருவருக்கும் வெவ்வேறு தாத்பரியங்கள் உண்டாகும்.

நடத்தையிலுள்ள இந்த வித்தியாசமானது அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் வெவ்வேறு பலனைத் தரும். ஏனெனில், அவர்கள் ஒரே காரியத்தை வெவ்வேறு கருத்துடன் செய்கிறார்கள்.

உதாரணமாக இருவரும் ஒரே நூலை பிரதிதினமும் சாயங்கால நேரத்தில் தனிமையாய் அதிக சிரமப்பட்டுக் கற்றுக்கொள்ளுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களில் ஒருவன் இதரர்கள் பேரில் தான் அதிகாரம் செலுத்தும்படியான சக்தி தனக்குண்டாக வேண்டுமென்ற

நோக்கத்துடன் அந்நூலைக் கற்றுக்கொள்ளுகிறான். மற்றவனோ, அதைத் தானும் கற்று இதரர்களுக்கும் கற்பித்து உபகாரமாயிருக்க வேண்டுமென்று எண்ணுகிறான். இவ்விருவர்களையும் சூழ்ந்திருக்கும் சுற்றங்கள் வெகு வித்தியாசமுள்ளவைகளாயிருக்கும்.

முதற் சொன்னவனுடைய சக்தியைப் பார்த்து இதரர்கள் அஞ்சுவார்கள். அவன் பேரில் அருவருப்பும் சந்தேகமும் பொறாமையும் கொள்வார்கள். அவனைச் சமாதானப் படுத்தி அவன் தயவை சம்பாதித்தும் அவனுக்கு மேற் போகவேண்டுமென்ற எண்ணத்துடன் பொய்யான சிநேகிதர்களாகி அவனை ஸ்தோத்திரம் செய்து பாசாங்காய் நடிப்பார்கள்.

இரண்டாவது மனிதன் யாவராலும் நேசிக்கப்பட்டும் உண்மையான சிநேகிதர்களால் சூழப்பட்டும் மரியாதையுடன் நடத்தப்படுவான். சிலர் பொறாமையின் பேரில் இவனை வெறுத்தாலுங் கூட எல்லாரும் இவனிடம் அதிக நம்பிக்கையுள்ளவர்களாயிருப்பார்கள். இவ்விருவர்களும் படிப்பும் சக்தியுமுள்ளவர்களாயிருப்பினும் ஒருவன் கெட்டவனாகவும் மற்றவன் நல்லவனாகவுமிருக்கிறான். ஆகையால் சுயநயம் பாராட்டாதவனே நிஜமான சந்தோஷசாலி.

இரண்டாவது மனிதன் தன் குணத்தை வரவர மேன்மைப்படுத்தி அடுத்த ஜன்மங்களில் ஆனந்தத்தை அடைவான், முதலாவது மனிதன் தன் ஸ்வபாவத்தை வரவரக் குறுக்கிக் கெட்டுப் போய் அடுத்த ஜன்மங்களில் துக்கத்தையடைவான்.

ஒரேவிதமான நல்ல வேலையில் இருவரும் பிரவிருத்தித்தாலும் ஒருவன் சுகத்தையும் மற்றவன் துக்கத்தையும் பலனாக அனுபவிப்பான். இது, காரியத்தைச்செய்யும்போது அவரவர்கள் கொள்ளும் நோக்கத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. அனேக நல்ல ஜனங்கள் தங்களுக்கு ஆபத்தான

வர்களை பலவந்தப்படுத்தி அவர்கள் ஒப்புக்கொள்ள இஷ்டமில்லாத வேறொரு மதத்தைத் தழுவும்படி உபத்திரவம் செய்து அவர்களை அதிககுரூரமாய் நடத்துகிறார்கள். அவர்களை கொடுமையான உபத்திரவங்களுக்கு உட்படுத்தியும் சிறைப்படுத்தியும் சில சமயம் கொலையும் செய்து விடுகிறார்கள். இவ்விதம் செய்வதில் அவர்கள் கருத்து என்னவென்றால், தங்களுக்கு ஆப்தமானவர்கள் அநியாயமாய் கெட்ட மதத்தைத் தழுவி முடிவில்லாத நரகத்திற்காளாவதாகவும் அவர்களைத் தங்களுடைய நல்லமதத்தில் திருப்பினால் அவர்களுடைய சரீரம் துன்பப்பட்டு அழிந்தாலும் கூட ஆத்மா நல்ல கதியை அடையுமென்றும் எண்ணுகிறார்கள்.

இவ்விதம் செய்வது தப்பிதமாயிருந்தாலும் அவர்களுடைய நோக்கமானது ஆப்தர்களை நரகத்திலிருந்து விலக்கி நற்கதியடையும்படி செய்வதாய் உண்மையான நம்பிக்கையுடன் செய்வதால் அடுத்த ஜன்மங்களில் சரீர உபத்திரவங்களையும் மதசம்பந்தமான தண்டனைகளையும் பலனாக அடைந்தாலும் கூட, அந்த பயங்கரமான சரீரத்துன்பங்களை தைரியத்துடன் பொறுத்துக் கொள்ளும்படியான மனோ திடத்தையும் பெறுவார்கள்.

அதிகாரச் செருக்கினாலும், குரூர எண்ணத்தினாலும், மற்றவர்களுக்குக் குரூரத் தீங்கிழைத்து உபத்திரவம் செய்பவர்கள், அடுத்த ஜன்மத்தில் சரீரத் துன்பங்களை அனுபவிப்பதுமன்றி, இரக்கமற்ற கொடிய எஜமானர்களால் கடுமையாய் உபத்திரவப்படுத்தப்பட்டு அவர்களிடம் தங்களுடைய செயலற்ற தீவிர கோபத்தையும் பொறாமையையும் காட்டுவார்கள்.

ஜனங்கள் தங்களை ஸ்தோத்திரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் சிலர் தருமம் செய்கிறார்கள். தங்களுக்கு உயர்வான நிலைமை கிடைக்குமென்று சிலர் தருமம் செய்கிறார்கள். சிலர் வேறொருவனைக் கெடுக்கவேண்டுமெ

ன்று தருமம் செய்கிறார்கள். வேறு சிலர் ஜனங்களுக்கு உதவி செய்யவும் அவர்கள் சந்தோஷமாயிருப்பதைப் பார்க்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் தருமம் செய்கிறார்கள். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமென்ற வாக்கியப்படி இவர்கள் எல்லோருக்கும் அடுத்த ஜன்மங்களில் ஏராளமான திரவியம் கிடைக்கும். ஆனால் எவனெவன் எந்த நோக்கத்துடன் கொடுத்தானோ அதற்குத்தக்கபடி சுகத்தையோ துக்கத்தையோ அனுபவிப்பான்.

ஜனங்கள் எந்தக் காரணத்தின் பேரில் ஒருகாரியம் செய்கிறார்களென்பதை நாமறியமுடியாது. ஆகையால் அவர்களைப்பற்றி நாம் தீர்மானம் செய்ய அருகர்களல்ல. அப்படிச் செய்வோமாகில் நமக்குத் துன்பம் விளையும். ஒரு காரியம் தப்பிதமென்று தெரிந்து கடைசியில் நன்மையுண்டாகுமென்ற நம்பிக்கையுடன் அதைச் செய்கிறவர்கள் தங்கள் நடத்தையைக் கெடுத்துக்கொண்டு தங்களுக்கே தீங்கைச் செய்துகொள்ளுகிறார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி நன்மை யுண்டானாலும் கூட அவர்கள் செய்த தீமைக்கு அது பரிகாரமாக மாட்டாது.

இவ்விதமாய்க் கெடுதலாய்த் தோன்றுகிற காரியங்கள் நன்மையாயும், நன்மையாய்த் தோன்றும் காரியங்கள் கெடுதலாயும் முடியலாம். நீ கெட்ட நோக்கத்தின் பேரில் கொடுத்தாலும் கூட நீ எந்த நிலைமையில் பிறந்தாலும் ஐசுவரியம் வந்து சேரும். நீ கொடுத்தது நல்ல நோக்கத்தின் பேரில் இருந்தாலொழிய அந்த ஐசுவரியத்தை நீயனுபவிக்கமாட்டாய். அநேக கர்மங்கள் கலப்பான நோக்கத்துடன் செய்யப்படுவதால் கலப்பான பலன்கள் உண்டாகின்றன.

வி. ரெங்குசாமி ஐயர்.

சாரணர் கதை.

சேஷு (ஒரு ஸ்கௌட்)

சேஷுவின் தகப்பனார் இறந்துபோய்விட்டார். அப்பொழுது அவனுக்குப் பதினெட்டு வயது. அவனுக்கு உலகானுபவம் கிடையாது. ஒரு கிழ அத்தையைத் தவிர அவனுக்கு உற்றார் யாரும் கிடையாது. புத்தி சொல்லவாவது உதவி செய்யவாவது வேறு மனுஷ்யாள் கிடையாது. கையிலே பைஸா கூட கிடையாது! அந்த வருஷம் தான் மெட்ரிக்குலேஷன் பாஸ் பண்ணியிருந்தான். ஆள் நல்ல பலமுள்ளவன். அவன் வயதுக்கு உயரம் ஜாஸ்தி. தகப்பனார் இறந்ததும் அவனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அனாதையான ஒருவாலிபன் சென்னையில் காலந்தள்ளுவது சிரமம். இதை அவன் அறிந்தான். எது எப்படியானாலும் கண்ணியமான வழியிலேயே தன் வயிற்றை வளர்க்கத் தீர்மானித்தான். ‘மவுண்ட் ரோட்’டில் எத்தனையோ கம்பெனிகள் இருக்கின்றன. அவற்றிலொன்றில் ஒரு குமாஸ்தா வேலையாவது கிடைக்காதாவென்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டான். தன் அத்தையைப் போய்ப் பார்த்துவிட்டு வந்த பிறகு, எது உசிதமோ அதைச் செய்யலாமென்றெண்ணினான்.

ஆகவே சென்னைக்குப் பத்து மைல் தூரத்திலிருந்த ஒரு செழிப்பான கிராமத்திற்குச் சென்றான். அங்கு அத்தையைக் கண்டான். பேசினான். கடைசியில் முடிவு என்ன? “சைய்! நீ என் தம்பி பிள்ளையா! வெளியே போ” என்று அத்தைக் கிழவி கடிந்து கூறினாள். ஏன்? சேஷு அத்தைக் கிழவியின் பேத்திகளிலொருத்தியைக் கலியாணம் செய்து கொள்ள சம்மதிக்கவில்லை “கேத்திவாண்டேக்கு” என்ன துணிச்சல். வயது சென்ற அத்தை சொல்லும் புத்திமதியைக் கேட்கவில்லை. அதுதான் காரணம். வந்துவிட்டது அத்தைக்குக் கோபம்!

சேஷு அத்தை வீட்டினின்றும் வெளிக்கிளம்பினான். எங்கேயோ, கால்போன வழி நடந்தான். ஏதோ சத்தம் கேட்டது. திமிர்ந்து பார்த்தான். ஒரு பர்லாங்கு தூரத்தில் ஒரு கூரைக்கட்டிடம் தீயில் வெந்துகொண்டிருந்தது. ஓரே யோட்டமாயோடினான். தீப்பிடித்திருந்த வீட்டுக்கெதிரில் இரண்டு ஸ்திரீகள் கதறிக்கொண்டிருந்தார்கள். “என் செல்லமே, பிரபுவுக்கு என்னடா பதில் சொல்லுவேன்” என்று கதறினார்கள். சேஷுவுக்கு உடனே வெந்துகொண்டிருந்த வீட்டிற்குள் யாரோ அகப்பட்டிருக்கிறார்களென்று புலப்பட்டது. ஒரு நொடிக்குள் அழுதுகொண்டிருந்த ஸ்திரீ போர்த்தியிருந்த கம்பளியை அவளிடமிருந்து வாங்கிக்கொண்டு, கைக்குட்டையை நனைத்து முகத்தைச் சுற்றிக் கட்டிக்கொண்டு எரிந்துகொண்டிருந்த வீட்டுக்குள் நுழைந்தான். சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு குழந்தையைக் கம்பளியில் சுற்றியெடுத்துக்

கொண்டு புகைக்குள்ளிருந்து வெளியே வந்தான். குழந்தை உச்ச ஸ்தாயியில் கதறவாரம்பித்தது. ஸ்திரீகள் கடவுளை வந்தனம் செய்தார்கள். சேஷுவையும் வெகுவாய் வந்தித்தார்கள். 'பேட்' 'பேட்' என்று மோட்டார் வண்டியின் கொம்பு ஊதிற்று. டாக்டர் கோவிந்தன் தன் வண்டியில் போய்க்கொண்டிருந்தார். சேஷு வண்டியை நிறுத்தச்சொல்லி ஜாடைகாட்டவே வண்டி நின்றது. தீயினால் பலவிடங்களில் புண்பட்டுக் கத்திக் கொண்டிருந்த குழந்தையை டாக்டரிடம் ஒப்புவித்தான் "அடடா! நம் ஜமீந்தாரின் குழந்தையல்லவா யிது;" என்றார் டாக்டர் கோவிந்தன்.

அன்று மாலை சேஷு ஜமீந்தாருடன் பேசிக்கொண்டிருந்தான். சேஷுவின் கதியைக்கண்டு ஜமீந்தார் இரக்கப்பட்டார். தன் ஒரே குழந்தையைக் காப்பாற்றிய சேஷுவைத் தனக்குக் காரியதரிசியாக நியமித்துக் கொண்டார். சேஷுவுக்கு வருஷத்துக்கு ரூ 600 சம்பளம்.

காலை எட்டுமணி—ஜமீந்தார் மஹமல் மெத்தையிடப்பட்டிருந்த ஒரு ஸோபாவில் அமர்ந்திருந்தார். அருகில் ஒரு நாற்காலியில் சேஷு உட்கார்ந்திருந்தான்.

'பிரபோ, முருகன் சமுகத்தைக் காணவந்திருக்கிறான்.' என்று பவ்யமாய் பகர்ந்தான் டபேதார்.

ஜமீந்:—வரச் சொல்லு.

டபே:—உத்திரவு.

ஜமீந்:—மிஸ்டர் சேஷு, இந்த முருகன் அவன் பாட்டா முப்பாட்டா நாள் முதற்கொண்டு அவன் முன்னோர்கள் எங்கள் முன்னோர்களிடம் உழைத்தவர்கள். "பனையடி" என்னும் நாலு ஏகர் பூமி அவன் குத்தகை. பணம் ரூ 50 கொடுக்கவேண்டும். முருகன் கொஞ்ச நாளாய்க் குடியில் கொஞ்சம் பணத்தை விரயம் பண்ண ஆரம்பித்ததையறிந்து, அவனைப் பணத்திற்காக முடுக்கினேன். 10 நாட்களுக்கு முன்னால் அவன் சீக்கிரத்தில் பணம் கட்டாதபக்ஷத்தில் குத்தகைச் சீட்டை ரத்து செய்துவிடுவேனென்று நோட்டிசு கொடுத்தேன். இப்பொழுது பணம் கொண்டுவந்திருக்கிறானோ அல்லது வாயிதாக் கேட்கவந்திருக்கிறானோ?

இதற்குள் முருகன் வந்துவிட்டான். முகத்தில் களையில்லை. கையைப் பிசைந்துகொண்டிருந்தான்.

ஜமீந்:—என்ன முருகண்ணரே, பணம் கொண்ணாந்தாப் போலே இருக்கு.

முருகன்:—மகராஜா, பணம்—

ஜமீ:—என்ன ?

முருகன்—நேற்று சாயங்தரம் நீங்கள் " ஆச்சி"யின் வீட்டுக்கு வருவீங்கள் என்று சொன்ஞங்க. அங்கேபோய்ச் சற்று நேரம் காத்திருந்தேன். தாங்கள் வரவில்லே. ஐந்து ரூடாய் நோட்டாய்ப் பத்து நோட்டை அங்கே மேஜை மேல் வைச்சுட்டு, ஒரு துண்டு கடிதாசிலே என் கையெழுத்தைப்போட்டு அத்தையும் அதோடே வச்சுட்டு வந்தேன் நேற்று "ஆச்சி" வீடு எரிந்து போச்சுங்க !

ஜமீ:—உன் நோட்டுகளும் எரிஞ்சுபோச்சு! பேஷ்! நோட்டுகளின் நிம்பர் தெரியுமா ?

முருகன்:—தெரியாதுங்க !

ஜமீர்:—எங்கே படிச்சே இந்தக் கதை ! இதை நம்புவேன் என்றெண்ணிஞயா ?

முருகன்:—நிஜமாக வைத்தேனுங்க. 4 மாதமாச் சேர்த்த காசுங்க.

ஜமீர்:—"சைய்! போக்கடாப்பயலே, என்ன புழுகு இது !

முருகன்:—இல்லவே இல்லே. நான் சத்தியமாய் அங்கே வைத்தேனுங்க. நான் பொய்பேசுவேனே ? மகாராஜா என்னைப் பொய்யன் என்று நினைக்கும்படியாக நான் ஒன்றும் செய்துவிடவில்லையே.

ஜமீர்:—போடா குடிகாரா. தெரியும் உன்னே. " பனையடி " உனக்கு இனிக்கொடுத்து வைக்காது போ !

முருகன்:—மகாராஜா, என் முன்னேர்கள் பரம்பரையாகச் சாகுபடி செய்து வந்த பனையடியாச்சே. நான் பிஞங்குக்குப் போயிடரேன். என் தம்பி நல்லவன். அவனவது அதை உழுது வரட்டும், மகாராஜா. எங்கள் வம்சத்தைவிட்டு ' பனையடி. ' போகாமல் காக்க வேணும்.

ஜமீர்:—சைய் போ! முடியாது. போ வெளியே. யாரடா டபேதார் !

முருகன் (கண்ணில் நீர் வடிய)—மகாராஜாவே, என் விதிவசம் போகிறேன்.

என்று சொல்லிக் கொண்டு கதவை யணுகினன். ஜமீந்தாரின் மனது இளகிற்று.

ஜமீந்—ஏய், முருகா ! இங்குவா. இப்பொழுதாவது நிஜத்தை ஒப்புக்கொள். கதைதானே கட்டினே?

முருகன்—இல்லே ஆண்டே. உண்மையாய் நோட்டுகளை வைத்தேன்.

ஜமீந்—சரி நீ நிஜம் சொல்லமாட்டாயே? பனையடி உன்னதல்ல போ! இப்பொழுதாவது ஒப்புக்கொண்டால் உன் தம்பிக்காவது கொடுப்பேன். ஒப்புக்கொள்ளாவிட்டால் அதுவும் கிடையாது.

முருகன்—மகாராஜா ஒப்புக்கிறேன். என்னவேணுமென்றாலும் ஒப்புக்கிறேன். பனையடியை என் தம்பிக்காவது கொடுங்கள். நான் பிறகு போகிறேன். மகாராஜாவே கதைதான் கட்டினேன் போதுமா ?

ஜமீந்—ஆ! அப்படி வா வழிக்கு! கடைசியில் உண்மை வெளி வந்ததா ?

சேஷு—கடைசியில் வந்தது தான் பொய். அதற்குமுன் சொன்னது நிஜம்.

ஜமீந்—ஆ! என்ன? எப்படி?

சேஷு—நான் நேற்று மாலை தீப்பிடித்திருந்த வீட்டிற்குள் சென்றேன்.

ஜமீந்—ஆம் அது மறந்து விட்டேனே—முருகா, இவர்தான் என் குழந்தையை நேற்று தீயினின்றும் தப்புவித்தார். உனக்கு யேதாவது தெரியுமா ?

சேஷு—நான் தங்கள் குழந்தையை எடுத்துக்கொண்டுவரும் பொழுது கதவடியில் பாதியெரிந்தும் எரியாததுமாயிருந்த இந்த காகிதத்துண்டையும் அநேகமாய் எறிந்து போன நோட்டின் பாகத்தையும் பார்த்தேன் இதோபாருங்கள்!

ஜமீந்—(வாங்கிப்பார்த்து விட்டு) முருகா ! உனக்கு ரொம்ப அபராதம் செய்துவிட்டேன். மன்னிக்கவேணும்—நீ என் பொய்யை ஒப்புக்கொண்டாய்?

முருகன்—மகராஜா என்னைப் பொய்யன் என்றெண்ணிய பிறகு நான் எப்படியானுலென்ன? நான் பொய் சொன்னதினால் என் தம்பி, எங்கள் குலத்திலுதித்தவன், அவனாவது க்ஷேமமாயிருப்பான் "பனையடி" எங்களிடமிருக்கும்.

ஜமீந்தார் முருகனுடன் வெளியே சென்றார். சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பி உள்ளேவந்தார்.

ஜமீந்—சேஷூ! முருகன் பினங்குக்குப் போகப்போகிறதில்லை. அவன் மனதைச் சமாதானப்படுத்தினேன். அவனே "பனையடியை" அருகுபடி செய்வான்.

சேஷூ—நிரம்ப சந்தோஷம்.

ஜமீந்—குழந்தையைத் தூக்கிவரும்போது இந்த சிறிய விஷயத்தை எப்படி உம்மால் பார்க்க முடிந்தது?

சேஷூ—நான் 'ஸ்கௌட்'. கண்ணை நன்ருய் உபயோகிக்கப் பழகியிருக்கிறேன். ஏதோ காகிதங்கள் எறிவதைப் பார்த்து, வரும் வழியிலிருந்ததால், அவைகளை யெடுத்துவந்தேன். சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்ற பழமொழிப்படி அச்சிறு துண்டின் மூலம் முருகன் நிலத்தை மறுபடி பெற்ருன். முதன் முதல் எழுத்துபாகமெல்லாம் எறிந்துவிட்டதால் எத்தனைரூபாய் நோட் என்று தெரியவில்லை. ஆனுல் காகிதத் துண்டு பூராவும் எரியாததால் அதிலிருக்கும் எழுத்தையும் நோட்டுத் துண்டையும் சேர்த்து முருகன் காகிதம் என்று என்மனதில் தோன்றினதால் அவைகளைத் தங்களிடம் கொடுத்தேன்

ஜமீந்—மெத்த சந்தோஷம்! நீர் இல்லாதிருந்தால் என் குழந்தையும் இறந்திருக்கும். முருகனும் பினங்கு போயிருப்பான். (சிறிது யோசனை செய்து) 'ஸகௌட்'டாய்ப் பழகுவது என்ருல் நிரம்ப சிரமமோ? அல்லது என்னுடைய தம்பி குமாரன் சேருவது கௌரவத்தாழ்வாயிருக்குமோ? என்று யோசிக்கிறேன்.

சேஷூ—சிரமம் என்ன? ஒன்றுமில்லை. குதிரை சவாரி முதலிய செய்தல் போல தேகத்தைப் பழக்கவேண்டிவரும். அதனுல் தேகத்திற்கு ஆரோக்கியமே யொழிய வேறில்லை. மேலும் கௌரவமா என்று கேட்கிறீர்கள்! பிறருக்கு உபகாரம் செய்து அவர்களது மனதில் அன்புடன் வாழ்வது கௌரவமா? அல்லது கிட்ட நெருங்கக் கூட அவர்கள் நடுங்கும்படி இருப்பது கௌரவமோ? தாங்களே கூறவேண்டும் பிரபுவே!

ஜமீந்—நன்ருய்ச் சொன்னீர்! நாளையே அவனையும் இந்த ஊரில் உள்ள அவனது நண்பர்களையும் உறவினரையும் ஸ்கௌட்களாய்ப் பழக்குவீரா?

சேஷூ—நிரம்ம சந்தோஷம்!

என். எஸ். சு.

பிரஹ்மஞானமும் கல்வியும்.

சமயநெறியைப்பற்றிய விஷயங்களை பிரஹ்மஞானமானது எவ்வளவு நன்றாய் விளக்கியிருக்கின்றதோ அவ்வாறே அது கல்வி சம்மந்தமாயும் விசேஷமான விளக்கத்தைக் கொடுக்கவல்லது. உற்று நோக்குங்கால், கல்வியும் பிரஹ்ம ஞானமும் ஒன்றேயென்று சொல்லக்கூடும். இரண்டிற்கும் அவ்வளவு நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டுளது. கல்வியின் நோக்கமானது யாதெனில் ஒரு ஜீவனை அஜ்ஜன்மத்தின் வாழ்நாளின் கடமைகளைச் சர்வரச் செலுத்தும்படி செய்வது தான். சமயநெறிகளின் நோக்கமோ யாதெனின், ஜீவனுடைய பற்பல ஜன்மங்களாலும் அடையவேண்டிய பயனை அடைவிப்பதாம். ஆகையால் பிரஹ்மஞானியின் கருத்து யாதெனின், இரண்டும் பிரித்தற்கியலாதபடி கலப்புற்றவையென்பதேயாம். ஆகையால் கல்வியை சமயக் கல்வியென்றும் மற்றைக்கல்வி யென்று பாகுபாடு செய்வது மதியீனமாகும். மஜ்ஜீனியென்ற பெரியவர் கல்வியே ஜீவனுக்கு ஆகாரம் என்று கூறியுள்ளார். ஒரு மனிதனுடைய புத்தியை மட்டும் தீட்டவல்ல கற்பினை யொன்று என்றும் அத்துடன் இது சரி இது தவறு என்று ஒழுக்கத்தைச் சீர்திருத்த முயலும் கல்வியை அதனினும் சிறந்த மற்றொன்று என்றும் கூறியுள்ளார்.

பிரஹ்மஞானத்தினின்று நாம் முதன் முதலாக அறிகிற அடிப்படையான உண்மையாதெனில் உடல்களின் மாறுதல்களால் உயிரானது விகாஸத்தை அடைகிறதென்பது தான். மனிதன் என்பது சரீரம் என்கிற பிராந்தியைப் போக்கடித்து, மனிதன் என்பது உண்மையில் சின்மயமான வஸ்துவென்றும், இறத்தல் அற்ற ஜீவன் என்றும் அறிவை நாம் அடையவேண்டும். எப்படிப் பள்ளிக்கூடங்களில் அடி வகுப்பிலிருந்து தலை வகுப்புக்கு வருஷம் ஒரு வகுப்பாக ஏறுகிறானோ அம்மாதிரியே ஜீவனானவன் மனிதவகுப்பில்

கீழ்த்தரமான காட்டு மனிதனுயிருப்பதிலிருந்து ஒவ்வொரு ஜன்மங்களாய் விகாஸத்தை அடைந்து கடைசியில் ரவீந்திரநாத டாகூர் அல்லது எமர்ஸன் என்ற தத்துவ சாஸ்திரி இவர்களைப் போன்ற பக்குவத்தை அடைகிறான்.

பிரஹ்மஞானத்தால் நாம் அறிகிற மற்றொரு விஷயம் யாதெனில், நாம் ஒரே சமயத்தில் பல உலகங்களில் பல சரீரங்களுடன் கூடியிருக்கிறோம். நமக்கு பிரகிருதத்தில் சம்மந்தப்பட்ட சரீரங்கள் மூன்றாகும். அவையாவன: ஸ்தூல சரீரம், காம சரீரம், மனோமய சரீரம். ஸ்தூல லோகத்தில் உபயோகப்படுவது நமது ஸ்தூல சரீரம், காமலோகத்தில் உபயோகப்படுவது காம சரீரம், மனோலோகத்தில் உபயோகப்படுவது மானஸ சரீரம். ஸ்தூல சரீரத்தை விட நுண்ணிய திரவியத்தால் அமைந்தது காம சரீரம், அதை விட நுண்ணிய திரவியத்தால் அமைந்தது மானஸ சரீரம்.

ஆகையால் கல்வி கற்பிக்க உத்தேசிக்கும் ஒவ்வொருவரும் மனிதனுடைய மூன்று சரீரங்களையும், அவன் மூன்று லோகங்களில் சஞ்சரிப்பவன் என்ற தத்துவத்தையும் அறிந்திருக்கவேண்டும். இன்றேல் கற்பிக்கும் கல்வியானது ஊனமானதாய்த் தான் இருக்கும் என்பது வெளிப்படை.

மேற்கூறிய இரண்டு உண்மைகளைக் கிரஹித்த உடன் நமக்கு வியக்தமாய்த் தோன்றுகிறதென்னவென்றால், ஒவ்வொரு ஜீவனும் தனித்த சுபாவத்தையுடையவன் என்பது தான் அதாவது சரீரங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று வேறுபட்டு பற்பல வயதுள்ளவையாய் இருப்பது போல் ஜீவர்களும் பற்பல வயதுள்ளவர்களாயும், பற்பல சுபாவமுள்ளவர்களாயும், இருக்கிறார்கள் என்று அறிகிறோம். முன் ஜன்மத்தில் ஒருவிஷயத்தை அறிந்த ஜீவன், அடுத்த ஜன்மத்தில் அதே விஷயத்தைப் படிக்க ஆரம்பிக்கும்போது அதைச் சீக்கிரம் கற்றுக்கொள்வதும், முதன் முதலாய் ஒரு விஷயத்தைக் கற்றுக்கொள்ளும் ஜீவன் அதைக் கற்றுக்கொள்வதில் சிரமப்படுவதும் இயல்பு. உபாத்தியாயர் வயதுமுதிர்ந்த

வராயிருப்பினும், சில சமயத்தில் சரீரத்தின் வயது குறைந்த ஒரு மாணாக்கன் உபாத்தியாயரைக் காட்டிலும் அனுபவத்திலும் ஞானத்திலும் முதிர்ந்தவனாக இருக்கலாம் என்பதும் நாம் அறியலாம். மேலும் ஜீவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் பற்பல அனுபவத்துடன் வளர்ந்திருப்பவர்களாகையால், அவர்களுடைய முந்திய தேர்ச்சிக்கு ஏற்றபடி வளர்வார்கள்; அவர்களுடைய குணங்களும் வேறுபட்டிருக்கும். ஆகையால் ஒவ்வொரு ஜீவனும் வளர்வதற்கு ஏற்ற சௌகரியங்கள் வேண்டும். காட்டிலிருக்கும் மரங்கள் எவ்வாறு யதேச்சையாய் வளருமோ; நிலத்தில் விளையும் பூச்செடி எவ்வாறு யதேச்சையாய்ச் செழிக்குமோ அங்ஙனமே ஒவ்வொரு ஜீவனும் யதேச்சையாய் வளரவேண்டும்.

மனிதன் திரிலோகியாகவும், திரிசரீரியாகவும் இருப்பதைப்பற்றி அடியில்கண்ட வினா உண்டாகலாம். அதாவது ஒவ்வொரு ஜீவனுடைய ஸ்திதி எப்படிப்பட்டதென்று எங்ஙனம் நிர்ணயிப்பது? மற்றவர்களை விட ஒரு ஜீவன் எவ்விதத்தில் வித்தியாசப்பட்டவன் என்று எங்ஙனம் தீர்மானிப்பது? ஒரே கற்பினை நூலுக்கடங்கும்படி எல்லா ஜீவர்களும் அமையமாட்டார்களா?

மிருகங்கள் முதலிய ஜீவராசிகள் தங்கள் சரீரங்களை அடக்கியாள வெகு சீக்கிரம் கற்றுக்கொள்ளுகின்றன. ஆனால் மனிதனோ அங்ஙனம் இல்லை. மேனாட்டு ஜீவதத்துவ சாஸ்திரிகளுக்கு இது ஆச்சரியத்திற்கு ஹேதுவாக இருக்கின்றது. இதன் காரணத்தை அவர்கள் அறியவில்லை. மனிதன் தன்னுடைய வெளிக்கரணங்களையும் அந்தக்கரணங்களையும் முற்றிலும் கைவசப்படுத்தி அடக்கியாள வெகுகாலமாகின்றது. அதற்குக்காரணம் என்னவென்று பார்ப்போம்.

பால்யத்தில் அதாவது சுமார் ஏழாம் பிராயம் முடியும் வரை ஜீவன் தன்னுடைய ஸ்தூல சரீரத்தைத் தன் வசப்படுத்தப் பழகுகிறான். ஞானேந்திரியங்களாகிற கண், காது,

மூக்கு, நாக்கு, தொக்கு இவைகளால் வெளி விஷயங்களைக் கிரஹிக்கப் பழகுகிறான். தன் சர்மேந்திரியங்களாகிற கை கால்களை உபயோகிக்கவும் பழகுகிறான். அதாவது அந்த வயது வரை அதற்கு முன்வரையுள்ள மானிட விகாஸ முறையைக் காட்டுகிறதாய்க் கொள்ளலாம். ஆகையால் குழந்தைகள் விஷயத்தில் மாண்டஸ்ஸோரி, கிண்டர் கார்டன், ஆகிய இவ்விரண்டு பயிற்சி முறைகளிலும் இக்காலத்துக் குறிய குணங்களை நன்கு அறிந்து அவைகளைச் செவ்வையாய்ப் பழக்குவதால் வெகுவாய் நன்மையுண்டாயிருக்கின்றது. இக்காலத்தில் நல்ல வழக்கங்கள் அல்லது தீய வழக்கங்கள் பிடிபடும். தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற பழமொழிப்படி இவ்விளம்பிராயத்தில் வழக்கப்படும் பழக்கங்களைப் பின்னர் மாற்றுவது சிரமமாகும். பிழையறக்கூறுவதும், நிமிஷம் தவறாது காரியத்தைச் செய்வதும், உற்று நோக்கலும், கீழ்ப்படிதலும், நல்ல ஒழுக்கமும், எட்டுவயதுள்ள குழந்தை கற்றுக்கொண்டிருக்கவேண்டும். இளங் குழந்தைகள் கண்கண்டதைக் கை செய்யுமாகையால் அக் குழந்தைகளைச் சுற்றியிருக்கும் விஷயங்கள் சுத்தமாயும் ஒற்றுமையுள்ளவையாயும், நல்ல மாதிரியாயும் இருத்தல் அவசியம். ஆகையால் குழந்தைகளுக்கு முன் பெரியவர்களுடைய நடத்தையும் வார்த்தையும், மேன்மையுள்ளவைகளாயும், சுசிருசியாயும கௌரவமாயும் இருக்கவேண்டும்.

முதல் ஏழுவருஷங்களுக்குப் பிறகு இரண்டாவது கௌமார பருவம். தன்னறிவு வரும வரையில் இந்தப்பருவம். அக்காலத்தில் தான் ஜீவன் தன்னுடைய காமமனஸின் சக்திகளைக் கைப்பற்றுகிறான். ஆகையால் அவன் காமமனஸின் விகாரங்களின் ரூபமாகவே உலகத்தை அறிகிறான். ஆகையால் இக்காலத்தில் அவனுடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் விசேஷமாய்க் கவனித்து அவைகளைச் சரியான வழியில் செல்லும்படி பாதுகாத்துப்பழக்கவேண்டும். அவனைச் சுற்றிலும் அன்புப், சந்தோஷமும்

மிருதுவான வார்த்தைகளுமே யிருக்கவேண்டும். அவன் படிப்போடு கானங்களையும், தேகப்பயிற்சி தரக்கூடிய விளையாட்டுகளையும் அப்பியசிக்கவேண்டும். மேலும் அவன் உபாத்தியாயர் உயர்ந்த எண்ணங்களை அவனுக்குப் புகட்டவேண்டும். அவைகளால் தான் காம மனவின் விகாரங்களை நல்வழிப்படுத்த முடியும். இந்த வயதில் தான் ஒழுக்க முறை நீதிகளையும், சமய நீதிகளையும் கற்பிக்கவேண்டும். இக்காலத்தில் இதைச செய்யத்தகும், இதைச் செய்யததகாது என்று சீர்தூக்கித் தீர்மானம் செய்யவேண்டிய பொறுப்பை மாணவனுக்குக் கொடுக்கக்கூடாது. வெகு சாதாரணமான விஷயங்களில் தவிர, அவ்விதப் பொறுப்பை அவன் வகிக்கத்தகுந்த பக்குவம இன்னும் வரவில்லை. விவேகத்தால் சீர்தூக்கிப்பார்க்கும் சக்தியை இன்னும் அவன் அடையவில்லை. காரண காரியங்களை ஆழ்ந்து அறியும் பக்குவமும் அவனுக்கில்லை யாகையால் அவைகளை ஆலோசிக்கும்படி செய்தலடாது. ஆனால் தன்னைச் சுற்றியும உள்ள உலக விஷயங்களை உற்று நோக்கியறியும்படி பழக்கவேண்டும. அவர்கள் கற்கவேண்டிய விஷயங்களாவன. இயற்கை சாஸ்திரம; கணக்கு, ரேகாகணிதம், படித்தல், எழுதுதல், இலக்கணம, சித்திரம், கதை ரூபமாய்த் தேச சரித்திரம், மேன்மக்களின் அதிசயச் செயல்கள், அவர்களுடைய சரித்திரங்கள், கானம், நந்தவனம்பயிரிடுதலாம். கடைசியில் கூறிய ஐந்தும்; காம மனதைச் சீர்படுத்துவதற்கேற்றவை. இயற்கை சாஸ்திரத்தைக் கற்பதால், உண்மையையே யறிந்து உண்மையையே உரைப்பது வழக்கத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. மாணாக்கன் இக்காலத்தில கற்றுக்கொள்ளவேண்டியது யாதெனில், உண்மையாய்ச் சிந்திக்கவும், உற்று நோக்கவும், ஏற்றக்குறைச்சலின்றி உள்ளபடி அறியவும், பழகவேண்டும். கீழ்ப்படிதலானது, மூத்தோரின் புத்திமதிக்குக் கட்டுப்பட்டு நடத்தலாக மாறவேண்டும். அதாவது பால்யத்தில் உபாத்தியாயர் "இதைச்செய்" "இதைச்செய்யாதே" என்று சொல்லுவார். ஆனால் கௌமார பருவத்தில் அவர்

"இது சரி" "இது தவறு" என்றே சொல்லவேண்டும். மாணாக்கன் உபாத்தியாயருடைய மேலான அறிவுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அபிப்பிராயத்திற்கு ஏற்றபடி ஒழுகவேண்டும். இக்காலத்தில் தான், மாணாக்கனுடைய சுபாவத்தில் நேரில்லாத குணங்களை மாற்றவேண்டும். அதாவது கோபம், ஆசை, பொறாமை, சுயநயம், பதட்டம், இவைகளை உபாத்தியாயர் கவனமாய்ப் பார்த்து, சமயோசிதமாக அவைகளை விருத்தியாகாமல் தடுக்கவேண்டும். படிப்புடன், விளையாட்டுகளையும், மனத்தளர்ச்சியுண்டாக்கும் விநோதங்களையும் கலக்கவேண்டும்.

இக்காலத்தில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய வேறு ஒரு விஷயம் உண்டு. இப்பருவத்திலுள்ள மாணாக்கர்களுக்கு ஞாபகப்படுத்தும் சக்தியானது மிகுந்திருக்கின்றது. மனித வர்க்கங்களில் முந்திய வகுப்பார்க்குக் ஞாபகசக்தி மிகுதியென்றும், பிந்தியவகுப்பார்க்குக் காரண காரிய ஆராய்ச்சி மிகுதியென்றும் நாம் அறிகிறோம். பிந்தியது அதிகமாக ஆக, முந்திய சக்தி குறைவது வழக்கம். இதற்கு வெகு காலத்திற்கு முன் உலகில் தோன்றிய மனித ஜாதியாருக்கு இப்போதிருப்பதைவிட வெகு அதிகமான ஞாபகசக்தியிருந்ததென்று நாம் புஸ்தகங்களில் படிக்கிறோம். மேலும் முன் ஜன்மங்களில் அடைந்த சக்திகளையெல்லாம் இந்த ஜன்மத்தில் விரைவாய திரும்ப அடைகிறோம் என்றும் சாஸ்திரங்கள் போதிக்கின்றன. ஆகையால் தான் குழந்தைகளுக்கு ஞாபகப்படுத்தும் சக்தி ஏராளமாயிருக்கின்றது. வயது ஆக ஆக, காரணத்தைப் பரியாலோசனை செய்யும் சக்தி வளர வளர, அச்சக்தி குறைகின்றது. அது போலவே, கல்வி கற்பிக்கும் போதகாசிரியர்களும் மனப்பாடம் பண்ணுவது குழந்தைகளுக்கு ஏற்ற இயற்கையான முறையென்றும், அச்சக்தியானது யௌவனத்தில் மறைந்துவிடும் என்றும் சொல்லுகிறார்கள்.

(தொடரும்.)

* மிஸ்காட்

---

* 'நியூ இந்தியா' பத்திரிகையிலிருந்து தமிழ்ப்படுத்தியது.

ஆர். அரங்கசாமி ஐயர்.

குற்றவாளிகளைச் சீர்திருத்துவ தெப்படி?

இதைப்பற்றிச் சிந்திக்கையில் அடியிற்கண்ட கேள்விகள் மனதி லுதிக்கின்றன.

1. 'குற்றவாளி' என்றால் யார்?

2. மனிதர் குற்றவாளிகளாவதற்குக் காரணமென்ன?

3. அக்காரணத்தை முற்றிலும் நீக்க என்ன செய்ய வேண்டும்?

4. பிறவிக் குணத்தாலே குற்றங்கள் செய்கிறவர்களை சீர்திருத்துவ தெப்படி?

1. குற்றவாளிகள் என்றால் யார்? சாதாரணமாக, ராஜாங்கச் சட்டத்துக்கு விரோதமாக நடந்து, அந்நடத்தைக்காக, இராஜாங்கத்தாரால் நியமிக்கப்பெற்ற நியாயாதிபதிகளால் குற்றஞ் செய்தவர்களெனத் தீர்மானிக்கப்பட்டுத் தண்டனை அடைந்தவர்களைக் குற்றவாளிகள் என்று கூறுகிறோம். ஆனால் மேற்சொன்ன குற்றங்கள் வாக்கு, காயம், இவைகளால் வெளிப்படும் குற்றங்களே தவிர, வெளித்தோற்றமின்றி மனத்தில் உண்டாகும் நினைவுகளால் ஏற்படும் குற்றங்கள் அல்ல. நினைவுகளால் ஏற்படும் குற்றங்களைப் பற்றிப் பின்பு சொல்லுகிறேன். ஒருவனை நிந்தித்தல், அவதூறாகப் பேசுதல், பொய் சாக்ஷி சொல்லுதல், முதலியன வாக்கினால் செய்யும் குற்றங்களாம். ஒருவனை அடித்தல், கொலை செய்தல், திருடுதல் முதலியன காயத்தால் செய்யும் குற்றங்களாம்.

2. மனிதர் குற்றவாளிகளாவதற்குக் காரணமென்ன? எனக்கு விபரம் தெரிந்து 40 வருஷங்களாக மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சினாப்பள்ளி ஆகிய இச்சில்லாக்களிலும் இப்பால-புதுக்கோட்டை சமஸ்தானத்

னும்என் சொந்த அலுவலின் மேலும், உத்தியோக முறையிலும் நான் போன காலங்களில் கிராமத்தார்களுக்குள் நாளுக்குநாள் ஒற்றுமை குறைந்து, கட்சிகள் ஏற்பட்டு வருவதைப்பார்த்து மனவருத்த முற்றிருக்கிறேன். முற்காலத்தில் கிராமங்களில் ஒற்றுமை இருந்ததற்கு ஸமுதாய நிலமே அறிகுறியாயிருக்கிறது. ஆனல் அப்பெயர்மட்டும் இப்பொழுது வழங்கி வருவதைப் பார்க்கிறோம். ஸமுதாயம் நிலம் என்பதற்கு கிராமத்தார்க்குப் பொதுவான நிலம் என்று அர்த்தம். அந்நிலத்தை கிராமத்தார்களிற் சிலர் தலைவர்களாயிருந்து மேற்பார்த்து வந்தார்கள். கிராமப் பொதுக் கார்யங்களின் செலவுக்காக அவ்வரும்படியை உபயோகித்தும், கிராமக்காரியங்களைத் தங்கள் சொந்தக்காரியம் போல் பார்த்தும் வந்தார்கள். கிராமத்தார்களுக்குள் அபிப்பிராய பேதத்தால் ஏற்படக்கூடிய விவகாரங்களைத் தாங்களே கூடிப்பேசித் தீர்த்தும் வந்தார்கள். அந்தத் தீர்மானங்களை ஜனங்கள் ஒப்புக்கொண்டு வெளியேறி, கச்சேரிகளில் அநேகமாய் வழக்குச் செய்யாமலிருந்தார்கள். ஆனல் நாள் செல்லச் செல்ல பொதுக்காரியத்தைப் பார்த்தவர்கள் சுய நயத்தை நாடிப் பொதுக்காரியங்களில் வெறுப்புக்கொண்டு பொதுப் பணத்தை தம் சொந்தத்துக்கு உபயோகப்படுத்த ஆரம்பிக்கவே கிராமங்களில் பிரிவினைகள் ஏற்பட்டன. கக்ஷிகளும 'கிரிமினல் கேசு' களும 'ஸிவில்' வியாஜ்ஜியங்களும், அதிகமாயின் கிராமத்தில் கக்ஷிகள் ஏற்படவே காவல்காரர்களுக்குள் கக்ஷிகள் ஏற்பட்டன. குற்றங்கள் நடவாமற் பார்ப்பதற்கும் நடந்த குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும, ஏற்பட்ட காவற்காரர்கள், தற்காலத்தில், தங்கள் வேலையைச் செய்யாமல் கக்ஷிப்பட்டு வரக்காரணமாயிற்று. ஜனங்களுக்குள் தெய்வ பக்தியும், சத்தியமும், குறைந்து வருகின்றன. ஆரியர்களை மனுவானவர் இந்தியாவிற்குக் கொண்டு வந்த காலத்தில ஜனங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு கிராமத்தார்களும, தேசத்தார்களும் ஒரே குடும்பத்தாரைப்போல் நடந்துவரும்படிக்கும, கிராம தேசங்களின் காரியங்களைப் பலவகையாகப் பிரித்து,

அப்படி பிரிக்கப்பட்ட காரியங்களைப் பார்த்துவர ஜனங்களை வகுத்தும், அப்படி வகுக்கப்பட்ட ஜனங்கள் தத்தம் காரியங்களைக் குறைவின்றியும் சீராகவும் செய்துவருகிறார்களா வென்று மேற்பார்த்துவர அரசர் முதலிய அதிகாரிகளை ஏற்படுத்தியும் செய்தார். குடும்பத் தலைவரைப்போல் அரசனை ஜனங்கள் பாராட்டி வந்தார்கள். அவரும் அப்படியே நடந்து வந்தார். அந்தக் காலத்தில் தர்மம் சரிவர நடைபெற்று வர, குற்றங்கள் அநேகமாய் இல்லாமலிருந்ததென்றே சொல்லலாம். அக்காலத்து உபாத்தியாயர்கள் தங்கள் மாணுக்கரைச் சொந்தப்பிள்ளைகளைப்போல் பாராட்டி, வைதிக லௌகிக முறைகளைத் தர்மசாஸ்திரப்படி உபதேசித்து சிஷ்யர்களைத் தங்களைப்போல் நடக்கும்படியும் செய்து வந்தார்கள். ஆனல் இக்காலத்திலோ அவ்வழக்கம் அநேகமாய்க் குன்றிவிட்டது.

தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பாலபாடசாலை, உயர்தரக் கலாசாலை, கல்லூரிகள், வேத அத்யயன பாடசாலைகள் இவைகளில் தெய்வபக்தி நல்லொழுக்கம், முதலிய நீதிமுறைகளைக் கற்பிக்கும் வழக்கம் அநேகமாய் நின்று போய்விட்டது. ஆனல் தற்காலப் படிப்பினுல் புத்திமட்டும் கூர்மையாகின்றது. மேலும் உபர்த்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும், பள்ளிக்கூடங்களில் மட்டும் சம்பந்தம் ஏற்பட்டுள்ளதே தவிர மற்றைக் காலங்களில் சம்மந்தம் இல்லாமலே போகிறது. தற்காலத்தில் சில பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்களை படிப்பு நேரம் தவிர மற்றக் காலங்களில் உபாத்தியாயர் பார்வையிலிருக்கும்படி உறைவிடங்கள் ஏற்பட்டிருந்தாலும் இம்முறை முற்காலம் வழங்கிவந்த குருகுல வாசம் போலாக மாட்டாது. சர்வகலா சாலையில் படிப்புக்காக பி. ஏ., எம். ஏ. முதலிய பெரிய பட்டங்கள் பெற்றவர்கள் கூட இராஜாங்க முறையினின்றும் தவறிக் குற்றங்கள் செய்வதையும் பார்க்கிறோம். இவ்விதம் தர்மாதர்மப் பயிற்சிக்குத் தற்காலப்பள்ளிக் கூடங்களில் அநேகமாய் ஹேது இல்லாததால், சமீபத்தில் வங்காளத்தில்

நடந்த சில கொள்ளைகளில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணுக்கர்கள் கூடச்சேர்ந்திருப்பதாகக் கேட்க ஆச்சரியந் தோன்றவில்லை.

முன் காலத்தில், ஒவ்வொரு வகுப்பாரும் தேசத்தின் பொது நன்மைக்காக உழைத்து வந்ததால் ஜனங்கள் க்ஷேமமாயும் திருப்தியாயும் இருந்தார்கள். ஆனல் தற்காலத்தில் ஒவ்வொருவரும் சுயநலத்தை அநேகமாய்ப் பாராட்டி நடப்பதால் முயற்சியின் உயர்வை அறியாமல் பிறர் பொருளை அபகரிப்பது முதலான தீச்செயல்களைச் செய்து வருகிறுர்கள். அக்காரணத்தை முற்றிலும் நீக்க என்ன செய்யவேண்டும்?

முன் போல் கிராமங்களில் ஒற்றுமை ஏற்படும்படியாகச் செய்யவேண்டும். இராஜாங்கத்தார் இதை உத்தேசித்து இப்போது பல கிராமங்களில் விவசாய ஐக்கியச்சங்கம், வியாபார ஐக்கியச் சங்கம் முதலான பல வகை ஐக்கியச் சங்கங்களும் கிராமப் பஞ்சாயத்துக்களும் ஏற்படுத்தி வருகிறுர்கள். ஒவ்வொருவரும் தேசாபிமானியாயிருந்து தம் சொந்த நலத்தை மட்டும் கருதாமல் பொது நன்மையையும் கருதி ராஜாங்கத்தாருடன் ஒத்து ஐக்கிய சபைகளையும், பஞ்சாயத்துக்களையும் ஏற்படுத்த முயல வேண்டும். தங்களால் இயன்ற மட்டும் குறைகளை நீக்கப் பிரயத்தனம் செய்யவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம் ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். கிராமத்தார்களை உற்சாகப்படுத்திக் கிராமப் பொதுச்செலவில் கட்டிடம் கட்டி பால பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் தக்க பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதற்கு முற்றிலும் இராஜாங்கத்தார் உதவியை எதிர் பார்த்தல் சரியன்று. கிராமத்தார்கள் முதலில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக் கொண்டால் அப்பால சர்க்காரில் வேண்டிய சகாயம் பெறலாம். பள்ளிக்கூடங்களில் லௌகிக சம்பந்தமான படிப்புச் சொல்லிக்

கொடுப்பதோடு மதசம்பந்தமாகவும் கல்வி கற்பிக்க வேண்டும். எல்லாமதங்களும் ஒரே ஆதியையும் முடிவையும் உடையன, என்பதையும் ஆதலால் மதத் துவேஷம் ஏற்படக் காரணமில்லை யென்றும், மனிதர் ஒவ்வொருவரும் ஈசுவராம்சம் பொருந்தினவரென்றும், சரீரம் அழிவுள்ளதென்றும், அதற்குள் உள்ள ஜீவன் அழிவற்றவனென்றும், கர்மம் புனர் ஜன்மம் இவைகளைப்பற்றியும் இளம்பருவத்திலேயே நன்றாய் போதிக்கவேண்டும். இவ்விதமாக மற்ற பெரிய பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் போதித்தல் வேண்டும்.

பகலில் பள்ளிக்கூடம்போகமுடியாத ஏழைகளுக்கும் வேலைக்காரருக்கும் உபகாரமாய் இராப்பள்ளிக்கூடங்கள் வைத்து மேற்கண்ட முறைப்படி கற்பிக்கவேண்டும்.

ஆண் மக்களைப் போல் பெண் மக்களுக்கும் பள்ளிக் கூடங்களை ஸ்தாபிக்கவேண்டும்.

உழைப்பின் கௌரவம்:— வேலைசெய்து பிழைப்பது கௌரவமென்பதைத் தெளிவாய்ப் போதித்துவரவேண்டும். ஜனங்கள் வேலைசெய்து பிழைக்கும்படி, ஐவேஜு உள்ளவர்கள், தொழில் சாலைகளையும் பல வஸ்துக்கள் உண்டாக்கும் யந்திரச்சாலைகளையும் ஏற்படுத்தவேண்டும். சர்க்காரிலும் இதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் எளிய ஜனங்களுக்குப் பிழைப்புக்கு வழி ஏற்படுவதுடன் நமது தேசத்தாருக்கு வேண்டிய சாமான்களை வெளிதேசங்களினின்றும் தருவிக்காமல் நமது தேசத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள ஹேதுவாகும்.

மதுரை ஜில்லாவில் வெகு காலமாய்த் தரிசாயிருந்த நிலங்கள் பெரியாற்று நீர் வளத்தால் சாகுபடிக்கு வரவே, அதனால் முன் களவு முதலிய தீச்செயல்களைச் செய்து காலங்கழித்து வந்த கள்ள நாட்டார்கள் அநேகர் விவசாயத் தொழிலைக் கைக்கொண்டு இப்போது நல்ல நிலைமையிலிருக்கிறார்கள். மேலும் ஷை ஜில்லா திருமங்கலம் தாலூகா

முதலிய விடங்களிலுள்ள உசிலம்பட்டிக் கள்ளர்கள் முன் பேர்போன திருடர்களாயிருந்தார்கள். அவர்களில் அநேகர் இப்பொழுது நல்ல குணமுள்ள விவசாயிகளாயிருந்து வருவதாகக் கேட்கச் சந்தோஷமாகவிருக்கிறது. இந்த உசிலம்பட்டி இலாகாவில் சில வருஷங்களுக்கு முன் ரிவினியூ டிவிஷனுபீசராகவிருந்த மகா-ள-ஸ்ரீ வேதாசலய்யர் அவர்கள், கள்ளர்களைக் கூட்டம் போட்டு அவர்களுக்கு வேண்டிய உபதேசம் செய்தும், அவர்களுக்கு நிலங்களை தர்க்காஸ்தில் விட்டுக் கொடுத்தும், நிலங்களை அபிவிருத்தி செய்ய சர்க்காரிலிருந்து சகாய வட்டிக்கும் நீடித்தவாயிதாவுக்கும் கடன் வாங்கிக் கொடுத்தும் பலவாறு உதவிசெய்து வந்தார். இதனால் மேல் கண்டபடி திருட்டுத்தொழில் செய்து வந்தவர்கள் இப்போது நல்லவர்களாக ஹேதுவாயிற்று. இவரல்லவோ தேசாபிமானி! ஆகையால் யோக்யதையும் மரியாதையுமுள்ள வேறு பலதொழில்கள் ஏற்பட்டால் வழக்கமாய்க் குற்றம் செய்து வந்தவர்கள்கூட நல்வழியில் திருந்தி விடுவார்கள் என்று இதனால் அறிகிறோம். இது பற்றியே பஞ்சாப் தேசத்தில் இராஜாங்கத்தில், குற்றஞ் செய்யும் இயல்புடைய ஜனங்களை விவசாயம் செய்து நல்ல குடிகளாக்க நிலம் முதலிய சாதனைகளைக் கொடுத்துச் சீர்திருத்தம் செய்து வருவதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு, தீத்தொழிலாளர்களைச் சீர்படுத்தும் விஷயமாய் ரக்ஷண்ய சேனைச் சங்கத்தாரும் வேண்டிய முயற்சி செய்து வருகிறார்கள். நமது கவர்ன்மெண்டாரும் இது விஷயத்தைப்பற்றி யோசித்து சீக்கிரம் வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களென்று நம்புகிறேன். விவசாயத்துக்காகக் கொடுக்கப்படும் நிலம் கூடியவரை நீர்வளம் நிலவளம் பொருந்தினதாயிருந்தால் தீயச்செயல்களைச் செய்கின்ற ஜனங்களின் நடத்தை சீக்கிரம் சீர்படும் என்பதில் சந்தேகமில்லை. தேசாபிமானிகள் ராஜாங்கத்தாருக்கு வேண்டிய தகவல் கொடுத்து முயற்சிப்பார்களாக.

கிராமக் காவல்காரர்களை முன்போல கிராமத்தாருடைய மேல்பார்வையில் வேலை பார்க்கும்படி செய்யவேண்டும். குற்றங்கள் நேரிடாமல் தடுக்கவும், குற்றங்கள் நடந்தால் அதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டு பிடித்து விசாரணைக்கு கொண்டுவரவும், களவுபோன சொத்துக்களைத் திருப்பவும், ஏற்பட்டிருக்கும் போலீசார் கிராமத்தாருடன் கலந்து தாங்கள் ஜனங்களின் பாதுகாப்பிற்காக ஏற்பட்ட வேலைக்காரர்கள் தான், என்று எண்ணியும் ஜனங்கள் தங்களுடைய பந்தோபஸ்துக்காகத் தான் போலீஸார் ஏற்பட்டவர்களென்று எண்ணியும், பரஸ்பரம் நம்பிக்கையோடு நடப்பார்களேயானால், அநேகமாய் குற்றங்கள் ஏற்படக் காரணமிராதென்று நான் துணிகரமாய்ச் சொல்லக்கூடும். தற்காலத்தில்லா அவர்களுக்குள் பரஸ்பரம் எவ்வளவு நம்பிக்கை இருக்கவேண்டுமோ அவ்வளவு நம்பிக்கை இல்லையென்றே சொல்லலாம். நிலவரி வசூல் செய்யும் அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும் கிராமங்களுக்கு சவாரி போகும் காலத்தில் கிராமங்களில் கக்ஷி இருக்கிறதா என்பதை விசாரித்து கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் சில்லறை விவகாரங்களை அறிந்து கிராமத்திலுள்ள சில முக்கியஸ்தரைக் கொண்டே, பஞ்சாயத்து மூலமாக கக்ஷிகளையும் விவகாரங்களையும் தீர்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்விதமாகவே, சுமார் 40-வருஷங்களுக்குமுன், திருநெல்வேலி ஜில்லாவில் கலக்டர் உத்தியோகமாயிருந்த பகின் துரையவர்கள் அநேக வழக்குகளை பஞ்சாயத்தின் மூலமாய்த் தீர்த்திருப்பதாய்த் தெரியவருகிறது. அப்படியே ஸர் ஜான் லாரன்ஸ் துரை அதிகாரியும் சில தீராவழக்குகளைப் பஞ்சாயத்தின் மூலமாய்த் தீர்த்திருப்பதாகச் சரித்திரவாயிலாய்த் தெரிய வருகிறது. இவ்விதமே இக்காலத்திய கலெக்டர் முதலிய அதிகாரிகளும் பிரயத்தனப்படுவார்களேயானால், குற்றங்கள் குறைந்து கிராமக்ஷேமத்துக்கும் தேசக்ஷேமத்துக்கும் ஏதுகாரமாய் இருக்கும் என்பது நிச்சயம், சமீபகாலத்தில் இந்தியாவில் ராஜப்பிரிதி

நிதியாயிருந்த ஹார்டிங் பிரபு கன்னடாவில் இருந்து வந்த சில சீக்கர்கள் தப்பெண்ணத்தின் பேரில் போலீசாரிடம் கலகம் செய்ததை மன்னித்து அவருடைய பெருந்தன மையைக் காட்டியது மற்ற கீழான அதிகாரிகள் பொதுஜன விஷயத்தில் எவ்விதம் நடக்கவேண்டுமென்று நிரூபித்துக் காட்டியதாகிறது.

என் உத்தியோக முறையில் திருநெல்வேலி இராமநாதபுரம் ஜில்லாக்களில் பல கிராமங்களிலிருந்த கக்ஷிகளை அக்கிராமத்திய சில முக்கியஸ்தர்களின் உதவியின்பேரில நீக்கி கிராமத்தார்களுக்குள் சமாதானம் யேற்படும்படி செய்துமிருக்கிறேன். இவ்விதம் சொந்த அனுபவம் இருப்பதால் தான், பொதுவாக அதிகாரிகளும் ஜனங்களும ஒற்றுமையுடன் முயற்சி செய்தால், நாளடைவில குற்றங்கள தன்படியே குறைந்து விடுமென்று துணிவுடன் சொல்லுகிறேன். கிராமங்களில் ஜனங்கள கக்ஷிப்படாமல் சமாதான மாய் வாழ்ந்துவர வேண்டிய முயற்சிகள் செய்யாததால், கக்ஷிமுற்றக் கலகங்களும் முற்றிவருகின்றன. அவைகளைத் தீர்க்க வருஷாவருஷம கோர்ட்டுகளும அதிகமாகின்றன. என்னபரிதாபம்! இதெல்லாம் தேசக்ஷேமத்துக்கே ஓர் குறை யல்லவா?

(தொடரும்.)

கே. எஸ். இராமச்சந்திர ஐயர்.

புத்தக விமர்சம்.

கஜேந்திர மோட்சவசனம்—ஆசிரியர் மதுரைத் திராவிட வித்தியா சங்கத் தலைவராகிய ப. ரா. ஐயாசாமி ஐயர் பி. ஏ., விலை அணா 3.

இது திருவடி தாசர் இயற்றிய கஜேந்திர மோட்சம் என்ற செய்யுள் நூலைப் பெரும்பாலும தழுவி எழுதிய வழி நூலாகும். வசன நடையானது அழகுடன் இனிமையும வாய்ந்ததாயினும் தமிழில் விசேஷப் பழக்கமில்லாதவர்க்கு பிறருதவியின்றி எளிதில் அறிய முடியாதபடியிருக்கின்றது. ஆசிரியா மாணுக்கராயிருக்கும போழ்தே இவ்வசன நூலினை வரைந்தார் என்பது அவரது அரிய தமிழ்த் தேர்ச்சியைக் காட்டுகின்றது. தமிழ் விற்பன்னா அனைவரும் இதனை வாங்கிப்படித்துப் பயன் எய்துவார்கள். வேண்டுவோர் மதுரை வடக்குமாசிவீதியில 907 வீட்டில் இருக்கும் ஆசிரியர்க்கு எழுதிப் பெறுக.

இதை கவனியுங்கள்!

இது ஒரு புது விநோதம்.

காற்றடைக்கும் தலையணை:

இதில் ஒரு சூக்ஷ்மம் உண்டு. இதிலிருக்கும் திருகாணியைக் கழற்றி, தலையணை எவ்வளவு உயரம் வேண்டுமோ அவ்வளவுக்கும் வாயால் ஊதி, உடனே அத்திருகாணியைப் போட்டுவிடுக. காற்றைப்போக்கிவிட்டால் ஜேபியில் கூட மடித்து வைத்துக்கொள்ளலாம் நாகரிகமான வேலை; விலை ரூபாய் ஒன்றே. ரூ. 1.

24 மணி நேரங்களுக்குள் குணம்!

உலகமெங்கும் புகழ் பெற்ற படைகொல்லி அல்லது ஜாஸ்மைன் அவர்களின் சிங்குவரம் லோஷன்

எவ்வித படை, எச்சத்தேம்பல், கடி, விஷகடி, கறப்பான், காரகபடை, நெடுநாளாக இருக்கும் தேம்பல் இவை இம்மருந்து போட்ட 24 மணி நேரங்களுக்குள், ஆச்சரியமான குணத்தை தரும். ஒரு தடவை உபயோகித்தால், உண்மை தெரியும்.

விலை புட்டி 1-க்கு 0-8-0.

விலாசம்:—அன்ன பூர்ணி ஸ்டோர்ஸ்,
39 ராமகிருஷ்ணன் தெரு,
மதராஸ்.

விலை சரசம்! **நயம் தினுசு!**



கண் சாளேஸ்வரக்காரர்களும், பார்வை மட்டாயிருக்கிற சிறுவர்களுக்கும், கணமங்கல், கண்காந்தல் முதலானவைகளுக்கும் ஆபரேஷன் செய்த கணகளுக்கும் இனமாகப் பரிசோதனை செய்து ஸ்படிக மூக்குக் கண்ணாடிகள் தினுசு தினுசான ரோல்டு கோல்டு, நிக்கல் ப்ரேம்களுடன் விலை சரசமாகக் கொடுக்கப்படும்.

K. R. & Sons, Scientific opticians Madura.,

உயர்ந்த இனிய நாடகங்கள்.

மாணிக்கவாசகர்	0—8—0	மங்களம்	0—4—0
மீனாக்ஷிசுந்தரம்	0—6—0	மீராபாய்	1—4—0

பூர்ணசந்திரோதயம் 4-வது தொகுதி.

பைண்டுபண்ணின சிலபிரதிகளே பாக்கி.

உயர்நலம் வாய்ந்த வியாசங்கள் கொண்டது. இனி கிடைத்தலரிது விலை. ரூ. 2—8—0.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

படங்களுடன் கூடிய கதைகள்.

சுசீலாபம்—அல்லது கற்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	} ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —	} ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை
லோககுருவின் அவதாரங்கள்
ஹிந்து என்பவன் எவன்
காயத்திரி
காயத்திரி ராமாயணம்
மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஷை செய்யுள்
எண்ணங்களின் ரகசியம்
திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
லோககுருவாகிய பரமன் வருவானேன்

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். சன்மார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை என் ஏற்றுக்கொள்ளக்கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள்.

தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை	
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0-8—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது	0—9—0
எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர்	0-12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு	0-12—0

தபாற் சார்ஜ் வேறு. பூர்ணசந்திரோதயம் ஆபீஸ் மதுரை.

உயர்ந்த தினுசுகள்! குறைந்த விலைகள்!!

தூ. ரெங்கசாமி அய்யர் அண் சன்ஸ்

தங்கமெடல்கள் சன்மானம் பெற்ற

ஜவுளி வியாபாரிகள்.

மதுரை.

ரூ. 1 முதல் 1000 ரூ. வரையுள்ள ஜவுளி தினுசுகள் விற்பனைக்குத் தயார்.

நம்முடைய ஜவுளிக்கடையில் காசி பனாரஸ், அம்மாபேட்டை, உள்ளூர், பெங்களூர், ஆரணி, காஞ்சிபுரம், கல்கத்தா, பம்பாய், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி இன்னும் அநேக ஊர்களிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டும் ஜரிகையும் கலந்த உயர்ந்த சேலைகள் ரூ. 50 முதல் ரூ. 1000 வரையிலும் முகூர்த்தப்பட்டு சோமன் ஜோடிகள் ரூ. 10 முதல் ரூ. 150 வரையிலும் ரவிக்கை தினுசுகள் ரூ. 2 முதல் ரூ. 100 வரையிலும் இன்னும் அநேக புது தினுசுகளும் ஏராளமாய்த் தயார்செய்து வைத்திருக்கிறோம். ஆகையால் வேண்டியவர்கள் நம்முடைய கடையில் வந்து பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர குறைந்த விலையும் கெட்டிச்சாயமுமுள்ள நாட்டு சேலைகள், துப்பட்டாக்கள், வேஷ்டி ஜோடிகள் முதலிய அநேக தினுசுகள் ஏராளமாயிருக்கின்றன.

ஹெட் ஆபீஸ், கீழவெளி வீதி.

பிராஞ்சு, மேலக்கோபுர வாசல்.

மதுரை.

ஜகப் பிரசித்தி பெற்ற
ஜின்டான் மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்று நாடெங்கும் பரவி பலபல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

380 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ. 1. 90 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 20 மாததிரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,
ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி, மதுரை.